பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 08 2026 SUNDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் இன்று தொடங்கியது.

2. குற்றவியல் சட்டங்கள் மூலம், மக்களுக்கு உரிய காலத்தில் நீதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. “வெள்ளையனே வெளியேறு” இயக்கத்தில் பங்கேற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு தலைவர்கள் பலர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

4. சீனாவில் டால்ஃபின் புயல் காரணமாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

5. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் Ashmita Chaliha வென்றார்.

>>>>>><<<<<<

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் இன்று தொடங்கியது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நாட்டுப்பற்றை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் நாடுமுழுவதும் பேரணிகள் நடத்தப்படுகின்றன.

இதனையொட்டி, குடியரசு துணைத்தைலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், அந்தமானில் உள்ள ஸ்ரீவிஜயபுரத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

வரும் 17ஆம் தேதிவரை நடைபெறும் இந்த இயக்கத்தில், மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த இயக்கத்தின் மூலம், கோடிக்கணக்கான மக்கள், இல்லங்களில் தேசியக்கொடி ஏற்றி வருவதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டு Suryapath திட்டத்தின் கீழ், உலகின் கிழக்குப் பகுதியில் உள்ள இந்திய தூதரகத்தில் தொடங்கி, மேற்கு பகுதியில் உள்ள அனைத்து தூதரகங்களிலும் தேசியக்கொடி ஏற்றி வைக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுச்சேரியில் இல்லந்தோறும் தேசியக்கொடி பேரணியை இன்று தொடங்கி வைக்கிறார்.

இதனிடையே, உத்தரபிரதேசம், ராஜஸ்தான், மேற்குவங்கம், ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கப் பேரணி இன்று நடைபெற்றன.

ஜம்மு கஷ்மீரில் உள்ள 20 மாவட்டங்களிலும் இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் தொடங்கியுள்ளது.

இதனையொட்டி, வந்தேமாதரம் பாடல், பேரணி, காண்காட்சிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தொழில்நுட்பம், நம்பகத்தன்மை, காலக்கெடு ஆகியவற்றின் அடிப்படையில் குற்றவியல் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி காவல்துறைக்கான குடியரசுத்தலைவரின் வண்ணக்கொடி விருதை இன்று வழங்கிப் பேசிய அவர், இந்த குற்றவியல் சட்டங்கள் மூலம், மக்களுக்கு உரிய காலத்தில் நீதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

புதுச்சேரி காவல்துறையில் 5 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

அப்பகுதியின் உள்நாட்டு பாதுகாப்பிற்கு காவல்துறையினர் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

பல்லாண்டுகளாக பிரான்ஸ் ஆட்சியில் புதுச்சேரி இருந்த போதிலும், இந்திய கலாச்சாரத்தையும், ஆன்மீக ஆற்றலையும் பேணிக்காத்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில், புதுச்சேரியில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு 13 ஆயிரத்து 762 கோடி ரூபாயை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் வீட்டு வசதி திட்டம், ஜல்ஜீவன், ஆயுஷ்மான் பாரத், நேரடி பணப்பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம், புதுச்சேரியில் 7 லட்சத்து 70 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளதாக திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>><<<<<<

"வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் பங்கேற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக சமூகவலைவளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இவர்களின் தைரியமும், தியாகமும் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஊக்கசக்தியாக விளங்குவதாக தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தி தொடங்கிய "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு புதிய உத்வேகம் அளித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்திற்கு இந்த இயக்கம் வலு சேர்த்ததாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

“வெள்ளையனே வெளியேறு” இயக்கம் தொடர்பாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தையும், தைரியத்தையும், தேசப்பற்றையும் நினைவுகூருவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் தொடர்பாக, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று ஐக்கிய ஜனதா தளம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. ராஜீவ் ரஞ்சன் பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 15 நாட்களாக மாணவர்களும், இளைஞர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன், போராட்டம் நடத்தி வரும் இளைஞர்களுடன் கலந்தாலோசித்து பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் திரு. ராஜீவ் ரஞ்சன் பிரசாத் அதில் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இந்த பிரச்சினை தொடர்பாக, CBI விசாரணை நடத்த வேண்டும் என்று இளைஞர்கள் வலியுறுத்தி வரும் நிலையில், முதலமைச்சர் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று பிஜேபி கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

சீனாவில் டால்ஃபின் புயல் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த புயலால் 3 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஷாங்காயில் உள்ள இரண்டு விமான நிலையங்களில் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

மணிக்கு 162 கிலோமீட்டர் வேகத்தில் வீசும் இந்த புயலால், சீனா மற்றும் வடக்கு தைவான் பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், Zhejiang, Fujian மாகாணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவு காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

யுக்ரைன் - அமெரிக்கா இடையே Patriot ஏவுகணை தடுப்பு ஏவுகணைகளை வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelensky தெரிவித்துள்ளார்.

செர்பியா தலைநகர், பெல்கிரேடில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஒப்பந்தத்தின்படி, மாதந்தோறும் அமெரிக்கா தடுப்பு ஏவுகணைகளை யுக்ரைனுக்கு வழங்கவுள்ளதாக கூறினார்.

செர்பியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள திரு. Volodymyr Zelensky, அந்நாட்டு அதிபர் திரு. Aleksandar-னுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

ஐரோப்பிய யூனியனில் இணைவது குறித்தும், தடையற்ற வர்த்தகம் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டதாக திரு. Volodymyr Zelensky கூறினார்.

>>>>>><<<<<<

ஒடிசாவின் சம்பல்பூர், சுந்தர்கர் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தொடர் மழையால் Baitarani, Salandi ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

Bhabrak மாவட்டத்தின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழந்துள்ளது.

மழை வெள்ளத்தால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உத்ராகண்ட் மாநிலத்தில் டேராடூர், நைனிடால், ஹரித்வார் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பல்வேறு சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் எச்சரிக்கையுடன் பயணம் மேற்கொள்ளுமாறு அம்மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

கேரளத்தில் வயநாடு, கோழிக்கோடு, கன்னூர், காசர்கோடு மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளம், லட்சத்தீவு கடலோர பகுதிகளில் மணிக்கு 65 கிலோமீட்டர் காற்று வீசக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோட்டயம், பந்தனந்திட்டா மாவட்டங்களில் பெய்துவரும் கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கோட்டயத்தில் 129 நிவாரண முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

ஈரோடு மாவட்டம், தாளவாடி அருகேயுள்ள பகுதிகளில் பயிர் நிலங்களை காட்டு யானைகள் சேதப்படுத்தி வருகின்றன.

பயிர்களை காப்பதற்கான காவலில் இருந்த விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மூர்த்தி 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் Ashmita Chaliha வென்றார்.

இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் அவர், 14-21, 21-14, 21-14 என்ற செட்கணக்கில் சீனாவின் Han Qian Xi-யை வென்றார்.

>>>>>><<<<<<

கொழும்பில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் போட்டி பயிற்சி ஆட்டத்தின் 3வது நாளான இன்று, உணவு இடைவேளை வரை இலங்கை கிரிக்கெட் லெவன் அணி, இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 106 ரன் எடுத்துள்ளது.

முதல் இன்னிங்ஸில் இலங்கை கிரிக்கெட் லெவன் அணி 8 விக்கெட் இழப்புக்கு 363 ரன் எடுத்த நிலையில், ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 357 ரன் எடுத்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

>>>>>><<<<<<

மும்பையில் நடைபெறும் பல்கலைக் கழங்களுக்கு இடையேயான உலக ஸ்குவாஷ் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஹாங்காங் - சீன அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>END<<<<<<